★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 11உ வியாழன் (24—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 12உ வெள்ளி (25—5—56) [இதழ் [illegible]]

7,04,638 பேருக்கு இந்தியாவில் வேலையில்லையாம்!

வேலை தேடித்தரும் நிலையங்களில், 1956 மார்ச் 31-ந்தேதி வரை பதிவான எண்ணிக்கையின் மூலம், இந்தியாவில் மொத்தம் 7,04,638 பேர் வேலையற்று இருப்பதாகத் தெரிகிறதாம்!

மேற்கு வங்கத்தில்தான் அதிகமான பேர்—1,14,871 பேர் வேலையற்று உள்ளனராம்! அடுத்து, உத்திரப் பிரதேசத்தில் 1,11,985 பேர்கள் என்று, மக்கள் சபையில், தொழிலாளர் மந்திரி கூறியுள்ளார்.

அறிவு தேடிய அன்புருவினன்!

பார்ப்பனீயத்தை எதிர்த்த பண்பாளன்

கொல்லாமையைப் போதித்த பெருங்குணவான்

இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றிய முதல் சமுதாயப் புரட்சி வீரன்

வாழ்க புத்தர் நாமம்! வெல்க புத்தர் நெறி!

எந்த ஒரு பொருளும், அதற்குரிய இன்றியமையாத் தேவை ஏற்படும் கட்டத்தில்தான், உயர்ந்த மதிப்பைப் பெறும்.

குறிப்பிட்ட குறிக்கோள், வாழ்க்கை இலட்சியம், தத்துவம் ஆக எதுவும், மேற்காட்டிய பொது விதிக்குக் கட்டுப்பட்டதேயாகும்.

புத்தர் தோற்றம், மேற்கொண்டபணி, காட்டிய வழி, விட்டுச் சென்ற கோட்பாடு, முன்பின் தொடர்பற்ற வெறும் அற்புதம் அல்ல—அவர் காலத்திய நிலைமையின் இன்றியமையாத எதிரொலியேயாகும்.

அப்பெருந்தகை உருவாக்கிய தத்துவம் எதுவானாலும், தம் வாழ்நாளில் அவர் ஒழுகிய ஒழுக்கம் எத்தகைய சிறப்புடையதானாலும், அவ்வகையில் அவர் முனைவதற்குரிய கட்டாயத்தை—அதற்குரிய பொருத்தமான காரணத்தைக் கண்டறிதல் வேண்டும். அப்பொழுதுதான், அவர் மேற்கொண்ட போக்கின் உள்ளடக்கத்தை முழுதும் ஒருவரால் விளக்கமாகத் தெரிந்து கொள்வது இயலும்.

அவர் காலத்தில் பார்ப்பனீயம்—ஆரியம் உச்சக் கட்டத்தில் இருந்தது. ஆரியப் புரோகித எதேச்சாதிகாரம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த நேரம்.

பார்ப்பனீய ஜாதி அமைப்பில் சிக்கி, தாங்கொணாக் கொடுமைக்கும், தொல்லைக்கும் மக்கள் ஆளாக்கப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்த கட்டம்!

வேத வேள்வியின் பெயரால், ஆடுமாடுகளை சித்திரவதை செய்து, தீயில் பொசுக்கி, பாதி வெந்ததும் வேகாததுமாக ஆரிய வேதமோதிகள், அதுவும் ஆண்டவன் பெயரால் தின்று மகிழ்ந்திருந்த கட்டம்!

ஆரியப் பார்ப்பனப் புரோகித ஆட்சியில் நாடு இருந்தது—நாட்டு மக்கள் நொந்த வாழ்வு வாழ்ந்து கிடந்தனர்.

இந்தத் தவறிய சூழ்நிலையில் சிக்கிச் சீரழிந்து கிடந்த மக்களை மீட்டு நல்வழிப்படுத்த புத்தர் புதுவழி கண்டார்.

தாம் கண்ட பார்ப்பனீய ஜாதிவெறி, கொலைவேள்வி, புரோகித ஆட்சி, புதுவழி காண்பதற்குரிய தூண்டுகோலாக அமைந்தது புத்தருக்கு!

புரோகித ஆட்சியிலிருந்து மீட்சிபெறத் துடித்துக் கிடந்த மக்களும், புத்தர் காட்டிய விமோசனப் பாதையில் அடிவைக்கத் தொடங்கினர். எனவே, பார்ப்பனீய ஜாதிக் கட்டுக்கோப்பு கலகலக்கத் தொடங்கியது.

இவ்விளைவைப் பின்னணியாகக் கொண்டு புத்தர்நெறியை நோக்குமிடத்து, அந்த ஒரு பெரும் சமுதாயப் புரட்சியாகவே கொள்ள வேண்டும்!

அக்காலத்தில் புத்தர் போதித்தப் புரட்சிக் கருத்துக்களுக்கு முன் தலைகாட்ட முடியாது மக்களிடமிருந்து பெயர்ந்துவிட்ட ஆரிய அனுசாரம் மீண்டும் ஆதிசங்கராச்சாரியால் உயிர்ப்பிக்கப்பட்டது.

புத்தர் அவதாரமாக்கப்பட்டார்! சாதாரண மக்கள் வணங்குவதற்குரிய ஆண்டவன் ஆக்கப்பட்டார்!

சக்கையை மக்கள் பற்றிக்கொண்டனர்! சாரத்தை வழிய விட்டுவிட்டனர்!

இந்தியத் துணைக் கண்டத்தில் உருவெடுத்த புத்தர் நெறி பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகிவிட்டது! பிறந்த இடத்தில் ஆழக் குழி தோண்டி புதைக்கப்பட்டது!

ஆரியம் மீண்டும் வெற்றி பெற்று பவனி வருகிறது! இன்றும் இந்த அவல நிலைதான்!

புத்தரிடம், காலஞ்சென்ற காந்தியார் அவர்கள்கூட பற்றுதல் காட்டியதில்லை என்பது கருதி சிந்திக்கத்தக்கது.

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கள் சீனாவை சிரியாவும் ஏற்கிறது!

மக்கள் சீனாவை எகிப்து ஏற்றதைத் தொடர்ந்து, விரைவிலேயே சிரியாவும் மக்கள் சீனாவுக்கு ஒப்புதல் தரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் அதிகரிக்குமாம்!

நீர்வலிக்குண்டு சோதனையின் எதிரொலி?

நியூயார்க், மே 23—

"நீர்வலிக் குண்டுகளின் சோதனைகளைத் தொடர்ந்து நடத்துவதால், புற்றுநோய் அதிகரிக்கும்" என்று, அமெரிக்காவின் பிரபல விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார்.

அணுசக்தி சோதனைகளின் விளைவுகளைப்பற்றிய உண்மைகளை மறைத்து, இனிப்பாக அணுசக்தி குழு கருத்தறிவித்துள்ளதென்றும், அதன் சோதனைகளால் நீண்ட நாளைக்கு ஏற்படக்கூடிய தீங்குகளைப் பற்றி முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை அறிவித்துள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று வாழ்ந்தோம்-இன்று தாழ்ந்தோம்-நாளை மீண்டும் வாழ்வோம்!

ரூ. 52 கோடி!

நெய்வேலித் திட்டத்திற்கு இறுதியாகஒதுக்கப்பட்டுள்ளதாம்

புதுடில்லி, மே 23—

'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் திட்டத்திற்குத் திட்டக்குழு ரூ. 52 கோடி இறுதியாக ஒதுக்கியுள்ளது," என்று மத்திய சர்க்கார் உற்பத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநிலத்தில் நிலக்கரியும், 'விசை'யும் பற்றாக்குறையாக இருப்பதால், தொழில் அபிவிருத்திக்கு இத்திட்டத்தை அமுல் நடத்துவது அவசியமானதாகும் என்று அவர் குறிப்பிட்டாராம்.

தண்ணீரை இறைப்பதற்காக 20 'பம்பு'கள் வேலை செய்வதால் தரையிலிருந்து 218 அடி ஆழத்திற்குத் தண்ணீர் குறைந்திருக்கிறது. நிமிடத்திற்கு 19,000 காலன் தண்ணீர் இறைக்கப்படுகிறது. ஜூன் மத்திக்குள் மேலும் 'பம்பு'கள் வேலை செய்யப்போவதால், மேலும் தண்ணீர் குறைந்து, நிலக்கரியைத் தோண்டி யெடுப்பது சாத்தியமாகும்.

ஆண்டிற்கு 38 இலட்சம் டன் நிலக்கரியாக அடுத்த 60 அல்லது 70 ஆண்டுகளுக்குத் தோண்டியெடுப்பதற்கு அங்கு நிலக்கரி இருக்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

க்ஷயப் பிணியாளருக்கு வீட்டிலேயே சிகிச்சை?

ஆராய்வு மேற்கொள்ளப்படும்

சென்னை, மே 24—

க்ஷயநோய் பீடித்துள்ள பிணியாளரை வீட்டுச் சிகிச்சை மூலமே எந்த அளவுக்குக் குணப்படுத்த முடியுமென்பதைப் பற்றியும், 'பெனிசிலின்' போன்ற 'சக்தி' வாய்ந்த மருந்துகள் உதவியால் இந்த நோயை எந்த அளவிற்குக் குறைக்க முடியுமென்பதைப் பற்றியும், சென்னை—எழும்பூரிலுள்ள க்ஷயரோகக் கழகம் ஆராய்ச்சி செய்யும். இந்தத் திட்டத்தை உலகச் சுகாதார நிறுவனம் மேற்கொண்டுள்ளது. மூன்று இந்திய ஆராய்ச்சியாளரும், மூன்று பிரிட்டிஷ் டாக்டர்களும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுவர்.

அதற்காகச் சூளுரைப்போம்!

திராவிடத்தின் உலகத் தொடர்புகள் குறித்து மு. கருணாநிதி

"திராவிடத்தின் உலகத் தொடர்புகள் இன்று என்ன?

"மலேயா ரப்பர் தோட்டங்களில், சிலோன் தேயிலைக் காடுகளில், ஆப்பிரிக்கச் சுரங்கங்களில் திராவிடர்கள் அவதியுறுகிறார்கள்; நாய்களைப் போல் நடத்தப்படுகிறார்கள்; சாக்கடை ஓரங்களில் வதிகிறார்கள்; மாடுகளைப் போல் உழைக்கும் கூலிகளாகிறார்கள்; அந்தந்த நாடுகளில், கேவலமான நிலைகளுக்கு ஆளாக்கப்பட்டு, உரிமையிழந்து தவிக்கிறார்கள்; கண்ணீர் வடிக்கிறார்கள்!

"இதுதான் திராவிடத்தின் இன்றைய உலகத் தொடர்பு.

"இன்று திராவிடத்தின் தூதுவர்கள் வெளிநாடுகளில் இல்லை. ரோமானிய சாம்ராஜ்யத்தில் பாண்டிய மண்டலத்தின் ராஜப்பிரதிநிதி வீற்றிருந்திருக்கிறான், அன்று! ஆனால், இன்று அப்படி எவரும் நமது திராவிடத்தின்—தாயகத்தின் பிரதிநிதிகளாக இல்லை; ஆனால், நாளை?

"நேற்று வாழ்ந்தோம்—இன்று தாழ்ந்தோம்! நாளை வாழ்வோம்—அதற்காக வாளெடுப்போம்! சூளுரைப்போம்! அதற்காகவே இங்கு—திருச்சிதனில்—தீரர்கள் உலவும் பூமியில்—மாநில மாநாட்டில் கூடியிருக்கிறோம்.

"இன்று இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குத் தூதுக் கோஷ்டிகள், கலாச்சாரக் குழுக்கள் செல்லுகின்றன. எதற்காக? இராமாயணத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைப்பதற்காக! மகாபாரதத்தைப் பற்றி விளக்குவதற்காக! மகாபாரதத்திலே வரும் பாஞ்சாலி எப்படி ஐவருக்கும் பத்தினியாக இருந்தாள்—சாமர்த்தியமாக என்பதை எடுத்துக் காட்டுவதற்காக! இங்கு லட்சுமி என்று ஒரு தேவதை உண்டு; அந்தத் தேவதை செந்தாமரையில்—அந்த இலேசான மலரில் எப்படி வீற்றிருக்கிறாள் என்பதைக் கூறுவதற்காக! இதற்குத்தானே, இங்கிருந்து செல்கிற தூது கோஷ்டிகள் பயன்படுகின்றன?

"இங்கே வருகிற வெளிநாட்டுத் தலைவர்களுக்கு பரிசுகள் வழங்குகிறார்கள். என்ன பரிசு? விநாயகர் பொம்மை! ஆனால், தனித் திராவிடம் அமைந்துவிட்டால், [illegible] புல்கானினுக்கு நாம் என்ன பரிசு வழங்குவோம்? [illegible] காண்கிறோம், இன்று! அந்த அருமையான நாளை, எதிர்பார்க்கிறோம்!

"இங்கிருந்து செல்கிற கலைஞர்கள் குழு, விபூதிப்பட்டையும், பட்டைநாமமும் தீட்டிக்கொண்டு செல்கிறார்கள், இன்று! ஆனால் நாளை.... எண்ணி எண்ணிக் கனவு காண்கிறோம், நாம்! 'அந்த நாள் வாராதா?' என்று எதிர்பார்த்துக் கிடக்கிறோம்.

"இன்றையத் திராவிடத்தின் உலகத் தொடர்புகள் இவைதான். ஆனால், நேற்று?

—என்று மு. கருணாநிதி அவர்கள், 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் திராவிடம் ஒரு காலத்தில் அரசியல் வாணிபம், கலை முதலிய துறைகளில் எத்தகைய பெருமைக்குரிய தொடர்பு கொண்டிருந்தது—வெளி [illegible] உலகத்தோரே என்பதை விளக்கினார்.

[அதாரு [illegible] தொடர்ச்சி [illegible]]

நம் நாடு
தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—5—'56 வியாழன்

வெற்றி! மகத்தான வெற்றி!

திராவிடத்தின் எதிர்கால அரசியல் வரலாற்றை திறம்பட உருவாக்கும் முதல் முயற்சியின் துவக்கமாக, சென்ற கிழமை இறுதி நான்கு நாட்களும் திரிசிரபுரத்தில் நடைபெற்ற நமது கழக மாநாடு அமைந்திருக்கிறது. நாம் மட்டுமேயல்லாது, நான்கு நாட்களிலும் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றவரும், செவிமடுத்தவரும், மேற்குறிப்பிட்ட கருத்துக்கே வந்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

திருச்சி நகரம் தோன்றிய நாள்தொட்டு, நமது கழக மாநாடு போன்ற ஒரு நிகழ்ச்சியை, அந்த நகரம் கண்டதில்லை எனக் கூறுவது மிக மிகப் பொருத்தமானதாகும். நமது கழகத்தைத் தம் பகைவர் பாசறை எனத் தவருக எண்ணிக் கிடப்பவர்கள் உள்ளக் கிடக்கையே அது என்றால், நமது கருத்தை விளக்கிக் காட்ட வேறு சொல்லே இல்லை என்றுதான் குறிப்பிட வேண்டும்.

பெரும் மின்சார உற்பத்தி நிலையம் போன்றே, விடுதலை உணர்வை ஒருங்கு திரட்டித் தேக்கி வைத்திருக்கும் மிகப் பெரும் அரசியல்கூடமாக, நமது மாநாடு உருவெடுத்திருந்தது. தக்கக் கருவிகளைக் கொண்டு தேர்ந்த மின்வல்லுநர்கள், உற்பத்தியாகும் மின்சார சக்தியை பல துறைகளிலும் மக்கள் நல்வாழ்விற்குப் பயன்படுத்துவது போன்றே, மின்சாரத்தினும் பன்மடங்கு ஆற்றல் மிகுந்த மாநாட்டில் கலந்திருந்து திராவிட இளைஞர்களின் விடுதலை உணர்வை, வடவர் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து நம்மரும் திராவிடத்தை மீட்பதற்குப் பயன்படுத்த முடியும். அப்புது நம்பிக்கையை நமக்களிப்பதில் மாநாடு முழுதும் வெற்றி பெற்றிருக்கிறது.

கழகத்தைக் குறித்தே திருச்சி முழுவதும் பேச்சாக இருந்தது. 'வள்ளுவர் நகர்' என்றே எங்கும் ஒலித்தது. 'மாநாடு' என்ற சொல் செவிடன் செவியிலும் புகும் அளவிற்கு, திருச்சி நகரின் மூலை முடுக்குகள் எங்கணும் எழும்பியது.

பிறவி ஊமையர் கூட 'மாநாடு' பற்றி பேசினர், கண்களால்—கை சாடையால்!

உணவு விடுதிகளும், தங்குமிடங்களும், மாநாட்டினரின் உணவு சாலைகளாகவும் உறையுள்களாகவும் மாறிக்கிடந்தன. சிற்றுண்டியும் உணவும் கால் கடுக்கக் காத்திருப்போருக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய அரும்பொருளாகிவிட்டன.

வெந்ததா—அறியவில்லை; வேகாததா — ஆராயவில்லை; புளிமிகுதியா—புரிந்துகொள்ளவில்லை; உப்பு மிஞ்சி இருக்கிறதா—உணர்ந்து உண்ணவில்லை. கிடைத்ததைக் கொண்டு பசியைத் தணித்து, மாநாட்டில் படைத்த விடுதலை விருந்துண்ணுவதிலேயே தங்கள் முழு கவலையையும் செலுத்தினர் நமது வீரர்கள்—வீராங்கனைகள்.

மாநாடு—விடுதலைப் படைவீடு.

முப்பதாண்டும் நிரம்பப் பெருத இளைஞரும், இளநங்கையரும் கூடி இருந்த போர் முகாம், மாநாடு.

இரண்டு இலட்சம் இருக்கும் மக்கள் கூட்டம் என்பது மாற்றார்களின் மதிப்பீடு. திரண்டிருந்தவர் கூட்டம் அதனிலும் கூடுதலாக இருந்தபோதிலும், மாற்றார் மதிப்பீட்டையே நாமும் ஒப்புவோம்.

இத்தகு மக்கள் செல்வாக்கு பெற்ற ஒரு அரசியல் கட்சி மாநாட்டை தமிழ் நாட்டில் எப்பொழுதும், எங்கும் இதுவரை கண்டதில்லை என்பது திருச்சியின் தீர்ப்பு.

இது வெறும் புகழ்ச்சி அல்ல—முக்காலும் உண்மை.

மாநாடு நடைபெற்ற 'வள்ளுவர் நகரம்' உண்மையிலேயே ஒரு பெரும் நகரமாகவே, நான்கு நாட்களும் காட்சித் தந்தது.

'நகரத்திற்குள் நகரம்' எனக் குறிப்பிடுவதுதான், நமது மாநாட்டின் சிறப்பை எடுத்தியம்பியதாகும்.

கதிரவனின் கொடுமை, காற்றின் கடுமை, திராவிடத்தை மீட்கும் கடமை பூண்ட நமது விடுதலைத் தூதுவர்களை தாக்கித் தகர்க்கும் திறமையற்றுப் போயின; பெருமழையும், நமது படை வரிசையைக் கலைக்க முயன்றும் தோற்றது.

தமிழ் நாட்டில் வாழும் மக்களின் பிரதிநிதிகள் மட்டுமே அல்லாது, மலையாளம், கன்னடம், ஆந்திரம் முதலிய திராவிடப் பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் பலரும் மாநாட்டில் கலந்துகொண்டனர். இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும், பம்பாயிலிருந்தும் பிரதிநிதிகள் மாநாட்டில் இடம் பெற்றிருந்தனர்.

பிரதிநிதிகளோ பலர்—அதனினும் பலப்பலர், திராவிடம் விடுபடும் மார்க்கங்காணும் இதயத் துடிதுடிப்புடன், மாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர்.

மாநாட்டிற்கு வந்திருந்தோர் தம்தம் ஊர்களிலிருந்து மாநாட்டை வந்தடைய மேற்கொண்ட பிரயாணத்தில் ஏற்ற அல்லல்கள், அரசாங்கத்தின் பழி வாங்கும் பண்பிற்கும், மக்கள் நலனில் அக்கரையற்றத் தன்மைக்கும் எடுத்துக் காட்டாக அமைந்திருந்தன.

மாமாங்கத்திற்கும், மற்றும் மடைமையைப் பேணிக் காக்கும் விழாக்களுக்கும் தனித்தனி புகைவண்டிகளை விடும் அரசாங்கம், நமது மாநாட்டுக்கென விசேஷப் புகைவண்டிகளைவிட முன்வரவில்லை. மக்கள் தேவையைப் பயன்படுத்திக்கொண்டு பொருளீட்டும் கள்ளச் சந்தையர் போல் அரசாங்கமும், தேவைக்கேற்பப் புகைவண்டிகளை விடுவதற்குப் பதிலாக, வழக்கமாகச் செல்லும் வண்டிகளைக் கொண்டே, பெரும் வருமானத்தைத் திரட்டி விட்டிருக்கிறது!

மக்கள் சக்தி, நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் திரண்டிருக்கிறது. மேலும் திரள விரைகிறது — என்ற உண்மையை திருச்சி மாநாடு மெய்ப்பித்துவிட்டது.

இந்தச் செய்தி நமக்கெல்லாம் தித்திக்கும் செய்தி.

ஆனால், காமராசர் அவர்களுக்கோ அச்சமூட்டும் செய்தி! வடவர் ஏகாதிபத்தியத்திற்கு திகைப்பளிக்கும் செய்தி!

தமிழ்நாட்டில் மக்களின் மனப்போக்கு எவ்வாறு உருவெடுத்து இருக்கிறது என்பதற்கு திருச்சி மாநாடு ஒரு எடுத்துக்காட்டு! இவ்வகையில் நாம் பெற்றிருக்கின்றோம் வெற்றி! மகத்தான வெற்றி!

பரம்பிகுளம் ஆற்றில் அணைக்கட்டு

சென்னை, மே 22—

சென்னை மாகிலத்து எல்லைக்குள்ளேயே பரம்பிகுளம் நதியில் ஓர் அணைக்கட்டு கட்டுவதற்கான திட்டம் சென்னை அரசாங்கத்தால் ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று அதிகாரபூர்வமான வட்டாரங்களின் மூலம் தெரியவருகிறது.

பரம்பிகுளம் ஆறு சென்னை மாகிலத்திற்குட்பட்ட பகுதியில் உற்பத்தியாகிறது என்பது தெரிந்ததே. சென்னை மாகில எல்லைக்குள்ளேயே சென்னை அரசாங்கம் மாத்திரம் தனிப்பட்ட முறையில் கட்டவிருக்கும் இவ்வணைக்கட்டினால் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

திரு — கொச்சி அரசாங்கம் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில, திருவிதாங்கூரில் பரம்பிகுளம் ஆறு, மற்ற ஆறுகள் ஆகியவற்றில் 5 அணைக்கட்டுகள் கட்டுவது பற்றிச் சென்னை—திரு-கொச்சி மாகிலங்களின் பிரதம எஞ்சினீயர்களுக்கிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும், சென்னை அரசாங்கத்தின் சமீபத்திய திட்டம்—அதாவது, சென்னை மாகில எல்லைக்குள்ளேயே ஒரு அணைக்கட்டு கட்டுவது என்ற திட்டம் பெரிய திட்டத்தைப் பாதிக்கக்கூடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோலையாற்றில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திரு — கொச்சி அரசாங்கத்தின் நீர்விசை மின்சார உற்பத்தி நிலயத்திட்டம் சென்னை அரசாத்தின் நலனைப் பெரிதும் பாதிக்கும் என்றும், அத்திட்டத்தைப் பற்றி முடிவு செய்வதற்கு முன்னரே திரு—கொச்சி அரசாங்கம் சென்னை அரசாங்கத்தைக் கலந்தாலோசித்திருக்க வேண்டுமென்றும் இந்திய அரசாங்கத் திட்டகுழுவுக்கும், மத்திய அரசாங்கத்திற்கும் சென்னை அரசாங்கம் அறிவித்திருக்கிறது என்றும் தெரிகிறது.

மாநில மாநாட்டில் முதல் உதவி!

வள்ளுவர் நகரில் நான்கு நாட்கள நடைபெற்ற தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டில், திருச்சி நகர சபையின் செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் சிறப்பான சேவை செய்தது.

சுமார் 360 பேர்களுக்கு முதல் உதவியும், சிகிச்சையும் அளித்திருக்கிறது.

பந்தலுக்குள் சுகாதார ஏற்பாடுகளையும் கவனித்துக்கொண்டது.

காயம்பட்ட சிலருக்கு, முதல் உதவிச் சிகிச்சைதந்து, பெரிய மருத்துவ விடுதிக்கு அனுப்பியும் சிகிச்சை அளித்தது.

மாநாட்டிற்கு வந்திருந்தோரின் நலம் பேணிய இந்த 'ஆம்புலன்ஸ்' படையினருக்கு, மாநாட்டினர் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர் — பாராட்டுரை வழங்கினர்.

கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளில் இலட்சிய விளக்கம்!

குழம்பியவர் தெளிவு பெற மாமருந்து!

மாநில மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சி விபரம்

மாநில மாநாட்டின் நான்காம் நாள்—இறுதி நாள், மற்றெல்லா நாட்களையும்விட சோபிதமானதாயிருந்தது. எல்லாவகையாலும், ஞாயிறு விடுமுறை நாள் என்பதாலும், மாநாட்டின் இறுதி நாள் என்பதாலும், மக்கள் வெள்ளம், மாநாட்டுப் பந்தல் முழுவதையும் முற்றுகையிட்டது போதாது என, பந்தலுக்கு வெளியேகூட பல்லாயிரக்கணக்கில் மக்கள் சேர்ந்துவிட்டனர்.

மாநிலம் முழுவதிலும் மட்டுமின்றி, இந்தியத் துணைக்கண்டத்தின் நிகழ்கால அரசியலில் ஈடுபாடுடைய அனைவருடைய உள்ளத்திலும் எழும்பிநின்ற கேள்விக்கு, வள்ளுவர் நகர் அன்றுதான் விடை தருவதாக அறிவித்திருந்தது. இந்த 20-ந் தேதியன்றுதான், நம்மால் தெளிவாக, அடையாளம் காணக்கூடிய மாற்றுக் கட்சி நண்பர்கள் பலரும் மாநாட்டிற்கு ஏராளமாக வந்திருந்தனர்.

காலை 9-15 மணிக்கே நிகழ்ச்சிகள் துவங்கின. அதற்கு முன்பே துவங்கிவிட்ட கழக வாக்கெடுப்பு, இனம் தெரியாத பரபரப்பை கூடியிருந்தோரிடை மூட்டிவிட்டிருந்தது.

தி. மு. கழகத்தின், இலட்சியம், கொள்கைகள், திராவிடத்தின் தமிழ் அல்லாத இதர மொழிப் பகுதிகளில் பரப்பப்பட்டதுண்டா? — என்ற, பலமுறை பதிலளிக்கப்பட்டுவிட்ட பழைய கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்கும் 'குணா'களுக்கு, கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய திராவிட மொழி பேசும் தோழர்கள் பதில் தந்தார்கள், மீண்டுமோர் முறை!

தோழர் எஸ். வி. பதி கன்னட மொழியிலும், தோழர் பார்த்தசாரதி தெலுங்கு மொழியிலும், தோழர் குபேர் மலையாள மொழியிலும், தி. மு. கழக இலட்சியத்தை — கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

அவர்கள், இந்தத் திராவிட மொழிகளில் கருத்துக்களை எடுத்துரைத்தபோது, மிகப் பெரும்பான்மையினராக வீற்றிருந்த தமிழ்மொழி பேசும் திராவிடர்கள் புரிந்து கொள்வதற்கு ஒன்றும் சிரமப்படவில்லை; எழுத்துக்கு எழுத்து புரிந்துகொள்ளவில்லை என்றாலும், சொல்லுக்குச் சொல் தெளிவாகப் புரிந்து கொள்ளவே செய்தனர். இதற்கு அத்தாட்சி? அந்த மூன்று தோழர்களும் பேசியபோது, அவர்களுடைய கருத்துக்களைப் புரிந்துகொண்டிராவிடில் தோழர்கள் எப்படி இடை இடையே, கையொலியெழுப்பி ஆரவாரம் செய்திருக்க முடியும்?

மலையாளத்தில் பேசிய தோழர் குபேர், மலையாள மக்களுக்கு, இயற்கையாகவே வடநாட்டு மாரவாரி-குஜராத்திக் கூட்டத்தின்-ஆதிக்கத்தின் மீது எத்தனை வெறுப்பு எழுந்து நிற்கிறது என்பதை ஆவேசத்தோடு எடுத்துரைத்தார்; பலரும் வியந்து பாராட்டினர்.

அடுத்து, 'கலையில் கருத்துப் புரட்சி' என்ற தலைப்பில், தோழர் சி. பி. சிற்றரசு, தனக்கே உரித்தான வழக்கமான நடையில் புரட்சிகரமானதோர் உரை நிகழ்த்தினர்.

திராவிட இளைஞர்களுக்கு—சிறுருக்கு, எத்தகு கல்வி வேண்டும் என்பதை பண்பட்ட—அனுபவம் மிக்க ஆசிரியப் பெருந்தகையான இராசையா அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

கல்வி என்றால் என்ன? அந்தக் கல்வி எப்படிப் புகட்டப்பட வேண்டும் என்பது குறித்து அவர் தந்த விளக்கத்தை மாநாட்டிற்கு வந்திருந்தோர் அனைவரும் கேட்டதால் பயன்பெற்றனர். அரசாங்கம், அந்த ஆசிரியப் பெருந்தகையின் கருத்துக்களைச் செவிமடுக்குமா?

'தனி நாடும் பொருளாதார வசதிகளும்' என்ற பெருந் தலைப்பில், புள்ளி விவரங்களை முன்நிறுத்தி, நடைமுறை அரசியல் அனுபவங்களை ஆதாரங்களாக்கி, திராவிடம் தனித்து வாழ முடியும் என்பதற்கான விளக்கங்களை அலசி ஆய்ந்தறிந்து கூறினர், தோழர் ப. உ. சண்முகம்.

அடுத்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், இயக்கத்தின் மறைந்த மாவீரர்களை, கூடியிருந்தோர் முன் கொண்டுவந்து நிறுத்தி, கண்ணீரை வரவழைத்தார். இயக்கத்தின் கொள்கைகளுக்காக உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களுக்கு, அஞ்சலி செய்ய வேண்டியது கடமை அல்லவா?

இறுதியாக, குழம்பிக்கிடக்கும் 'அகில இந்திய அரசியலவாதி'களின் கொள்கைக் குழப்பங்களை ஒரு கலக்குக் கலக்கி, தெளியவைத்து, கொள்கைக் குழப்பங்களுக்குக் காரணங்களை பளிங்கு நீர்போல் தெளிவாக விளக்கிக் காட்டினர் தோழர் ஈ. வெ. கி. சம்பத்.

அவரது [illegible]மை மிகுந்த வாதங்கள், குழம்பிக் கிடப்போருக்குத் தெளிவைத்[illegible]தராது போய்விடுமானால், குழம்பியவர் தெளிய வேறு வழி[illegible] கிடையாது. அத்தனை சிறப்பாக அமைந்திருந்தது அவரது முழக்கம். அவரது சொற்பொழிவிற்குக் கூடியிருந்தோர் இடையிடையே எழுப்பிய கையொலியும், ஆரவாரமும், கால் புள்ளி, அரைப் புள்ளிகளாக அமைந்திருந்தன.

அத்துடன் பகல் 2 மணிக்கு, காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. இடைவேளை உணவுக்காக மாநாடு கலைந்தது.

★

காலை நிகழ்ச்சிகள் முடிந்த போதே, உடனே மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

(3-ம் பக்கம் பார்க்க)

மாநில மாநாடு

வரவு:

ரூ. 1,10,000

நுழைவுக் கட்டணத் தொகை

மணிப்பூரில் பசிக் கொடுமையால் 19 நாகர்கள் இறந்தனர்?

அரசாங்கத்தின் மறுப்பு

புதுடில்லி, மே 22—

மணிப்பூருக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தில் 30 மைல்கள் ரோடு போட்டதற்குக் கூலி கொடுக்காததாலும், பசிக் கொடுமையாலும் 19 நாகர்கள் இறந்துவிட்டது பற்றி விவாதிப்பதற்காக ஒரு ஒத்திவைப்புப் பிரேரபணையை எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. ரிஷாங் கீசிங் என்பவர் மக்கள் சபையில் கொண்டுவந்தார்; அதைச் சபாநாயகர் நிராகரித்துவிட்டார்.

பசிக் கொடுமையால் இறந்ததாக அரசாங்கத்திற்குத் தகவல் வரவில்லை என்றும், அப்பகுதியில் உணவுத் தானிய வினியோகத்திற்காகத் திருப்திகரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் உள்நாட்டு மந்திரி திரு. பண்டித பந்த் கூறினர்.

திரு கீசிங், அப்பகுதியில் பசிக் கொடுமையால் இறந்தவர்கள் பற்றி அப்பகுதியில் வாழும் மக்களிடமிருந்து தமக்குக் கடிதங்கள் வந்திருப்பதாகக் கூறினர்.

ஸ்ரீபெரும்புதூர் கோயிலின் மோசமான நிலை

வினோபா பாவேயின் வருத்தம்

ஸ்ரீபெரும்புதூர் மே 22—

இன்று மாலையில் ஸ்ரீபெரும்புதூரில் உடையவர் கோயிலுக்கு முன்னல் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தின்போது ஆச்சாரியா வினோபாபாவே, ஸ்ரீபெரும்புதூர் கோயிலைப் பற்றிக் குறிப்பிட்ட கருத்துக்கள் சில வருமாறு:—

"ஸ்ரீபெரும்புதூர் கோயில் தூய்மையற்றதாயும், அழுக்குகள் நிறைந்ததாயும் உள்ளது. இக்கோயிலில் வௌவால்கள் நிறைந்துள்ளன; இருளால் சூழப்பட்டுள்ளது; துர்நாற்றம் வீசுகிறது. நான் இக்கோயிலுக்குள் ஒருமுறை சென்று பார்த்தேன். இரண்டாம் முறை அதற்குள்ளே செல்ல எனக்கு விருப்பமில்லை. இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையில் பக்தி எங்ஙனம் உண்டாக முடியும்? இவை யாவற்றையும் பார்த்து நான் பெரிதும் வருத்தமடைகிறேன்," என்று அவர் உருக்கமாகப் பேசினர்.

பின்னர், இயேசுநாதர் தோன்றிய இடத்தையோ, அல்லது முகம்மது நபி நாயகம் தோன்றிய மெக்காவையோ போய்ப் பார்க்க வேண்டுமென்றும், அவை தூய்மையாகவும், அழகாகவும் வைக்கப்பட்டுள்ளனவென்றும், நல்ல முறையில் அவைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மற்ற இந்துக்களின் கோயில்களும் இப்படியேதான் இருக்கும் என்று தாம் நினைப்பதாகவும், ஸ்ரீபெரும்புதூர் வாசிகள் தம் கோயிலை இவ்வளவு மோசமாக வைத்திருப்பது மன்னிக்க முடியாத குற்றம் என்பதாகவும், 'தர்மத்தின் முதற்கொள்கை தூய்மைதான்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவ ஒப்பந்தம்

செய்துகொள்ள முடிவாம்!

மாஸ்கோ, மே 22—

தென்கொரியா, பார்மோசா, தெற்கு வியட்நாம் ஆகியவற்றின் தலைவர்கள் ஒரு இராணுவ ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு முடிவு செய்துள்ளனர் என்று 'ரெட் ஸ்டார்' என்ற சோவியத் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளதாம்.

டில்லி காங்கிரஸ் கூட்டத்தில் குழப்பம்

புதிதாகக் காங்கிரசில் சேர்ந்தவர் பேசுவதற்கு ஆட்சேபணை

புதுடில்லி மே 20—

காஷ்மீர் சம்பந்தமாக இப்போது இந்திய அரசாங்கம் செய்துள்ள முடிவை—குறிப்பாக அண்மையில் பிரதமர் நேரு அவர்கள் போர்நிறுத்த அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துவிடுவது என்று விடுத்த அறிக்கையைப் பொது மக்களுக்கு விளக்கிக் காட்டுதற்காக டில்லி பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் கூட்டப்பட்ட கூட்டத்தில் சுமார் 2 மணிநேரம் கலவரம் ஏற்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஜனசங்கத்தின் தலைவராக இருந்த மௌலி சந்தர் சர்மா அவர்கள் அண்மையில் காங்கிரசில் சேர்ந்துவிட்டார். அவர் கூட்டத்தில் பேசுவதை ஆட்சேபித்துச் சிலர் ஆர்ப்பாட்டம் செய்ததின் விளைவாகவே கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது.

பிறகு போலீஸ் தலையிட்டு அமைதியை நிலைநாட்ட முயன்றதாம்; எனினும், குழப்பம் தொடர்ந்து இருந்துகொண்டுதான் இருந்ததாம். குழப்பத்திற்கிடையே சர்மா, விடாமல் பேசியது குறிப்பிடத்தக்கதாம்!

தென்னாட்டில் பொறி இயல் கல்லூரி

இன்னும் இடம் தேர்ந்தெடுக்கப்படவில்லையாம்

புதுடில்லி, மே 22—

தென்னாட்டில் பொறி இயல் உயர்நிலைக் கல்லூரி ஒன்றை அமைப்பதென முடிவு செய்யப்பட்டிருந்தும் அதற்கான இடம் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சென்னையில் அமைக்கப்படலாம் என்று கூறப்பட்டிருக்கிறதே யொழிய இன்ன இடம் என முடிவு செய்யப்படவில்லை. சென்னை ஆட்சியினர் கிண்டி எஞ்சினீயரிங் கல்லூரியை இதற்குப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கூறினர். ஆனால் இன்னும் இதுபற்றி முடிவு செய்யப்படவில்லை. இன்னும் 6 மாத காலத்திற்குள் இதுபற்றிய முடிவு தெரிந்துவிடும் என்று இந்திய அரசியலின் உதவிக் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

அல்ஜீரியா புரட்சித் தலைவர் கைது?

அல்ஜீரியா, மே 22—

ஐன் டிமோசன்ட் பிரதேசத்தில் புரட்சி இயக்கமாகிய தேசிய விடுதலை முன்னணி நிறுவனத்தின் தலைவரும், ஐந்து உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

வினோபா பாவே பிரார்த்தனைக் கூட்டம்

2 மார்வாரிகள் கடைகள் மூடவில்லையாம்

ஸ்ரீபெரும்புதூர், மே 22—

ஸ்ரீபெரும்புதூரில் ஆச்சாரியா வினோபா பாவே, இங்குள்ள உடையவர் கோயிலுக்கு முன்பு நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் மக்களை அமைதியாக அமரும்படி செய்வதற்கு 15 நிமிடங்கள் ஆயினவாம்.

பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்ற இடத்திலிருந்த எல்லாக் கடைகளும் மூடப்பட்டன; ஆனால் இரண்டு மார்வாரிகள் வட்டிக் கடைகள் மட்டும் மூடப்படவில்லையாம். அம்மார்வாரிகளைக் கடைகளை மூடும்படி ஆச்சாரியா வினோபாபாவே கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

கன்னடம், தெலுங்கு, மலையாள...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அதை ஒட்டி, பிரதிநிதிகள் பலரும் பகல் உணவிற்குக்கூடச் செல்லாது, மேடையருகே அமைந்திருந்த பந்தலில் கூடினர். சுமார் 2-30 மணிக்கு பிரதிநிதிகள் கூட்டம், தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் தலைமையில் துவங்கிற்று.

தி.மு. கழக பொதுக் குழுவினல் விவாதிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்பட்ட தீர்மானங்கள் பிரதிநிதிகளின் பரிசிலனைக்கு வைக்கப்பட்டன. பிரதிநிதிகள் பலரும், தீர்மானங்களை ஆராய்ந்து ஏற்றுக் கொண்டதுடன், சில தீர்மானங்களை விரிவாக்கவும் பெருக்கவும் வேண்டுமெனக் கோரினர். அவர்களுடைய கோரிக்கைகள் பரிசிலிக்கப்பட்டு, பல ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானங்கள் முழு வடிவம் பெற்றன.

சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கும் அதிகமாக நடைபெற்ற அந்தப் பிரதிநிதிகள் கூட்டம் முடிந்த உடனேயே, மாலை 4-5 மணிக்கு மாநாடு மீண்டும் கூடிற்று.

தீர்மானங்கள் பலவும், பல தோழர்களாலும், பிரதிநிதிகளாலும் முன்மொழிந்து, வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்களை விளக்கி பல முன்னணி வீரர்களும் பேசினர்.

தீர்மானங்கள் விளக்கப்படும் போது, திராவிடமே உடலெடுத்தது போன்று, வள்ளுவர் நகர் ஆவல் வெள்ளத்தில் மூழ்கத் தொடங்கிற்று. காரணம் இரண்டு; ஒன்று, 'பொதுத் தேர்தலில் கழகம் கலந்துகொள்வதா வேண்டாமா?' என்ற கேள்விக்குப் பதில் என்னவோ என்பது; மற்றொன்று 'அண்ணா என்ன கருத்துரை வழங்கப் போகிறார்?' என்பது.

மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக முடிந்து, இறுதிக் கட்டத்தை வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தன. தோழர்கள் பலரும் தங்கள் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்த ஆவல் முழுவதையும் முகத்தில் தேக்கி, மேடையை உற்று நோக்கிய வண்ணமிருந்தனர்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் இயங்கிய குழுவினரும் வாக்குகளை எண்ணி முடித்து மேடைக்கு வந்தனர்; ஆவல் மேலும் தூண்டப்பட்டது.

தீர்மானங்கள் பலவும் நிறைவேறிய பின், மாநாட்டுத் தலைவர், வாக்கெடுப்பு முடிவினை அறிவித்தார். அப்போதிருந்த நிலையைத்தான் ஏற்கனவேயே எழுதியிருந்தோமே!

பின்னர், பொதுத் தேர்தல் பற்றிய தீர்மானத்தைத் தலைவர் கொண்டுவந்தார். பலத்த கையொலிக்கிடையே அத்தீர்மானமும் ஒருமனதாக நிறைவேறிற்று.

பின்னர், தலைவர் அவர்கள், அண்ணா அவர்களைப் பேச அழைத்தார். மக்களின் ஆரவாரம் அடங்க நெடுநேரம் ஆயிற்று.

அண்ணா அவர்களும் அரியதோர் கருத்து மழை பொழிந்தார்! தோழர்களின் உள்ளத்தைக் குளிர்வித்தார்! மாற்றாருக்கு மருட்சியை ஊட்டினர்! எதிரிகளைக் கலங்கச் செய்தார்! கழகத் தோழர்களுக்கு அறிவுரை வழங்கினர்!

அண்ணா மாநாட்டில் சிறப்புரை ஆற்றினர் என்றால் போதாதா? வர்ணிக்க வேறு வேண்டுமோ?

பின்னர் தலைவர் அவர்கள் சுருக்கமானமுடிவுரை பகன்றதும், மாநாட்டு நிர்வாகிகள், மாநாட்டின் வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் இதயபூர்வமானநன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இரவு 10-30 மணி அளவில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரின் 'சுமை தாங்கி' நாடகம் சிறப்பாக அமைந்திருந்தது—மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக!

'நான்கு நாட்கள்—மறக்கமுடியாத காட்சிகளை மனதில் பதித்துவிட்ட நாட்கள், இத்தனை வேகமாகவா பறந்தோடி விட்டன? இன்று ஊருக்குத் திரும்பவேண்டுமே! ஏன், இன்னும் இருநாட்கள் இங்கு நிகழ்ச்சிகள் இருந்திருக்கக் கூடாதா?'— என்ற ஏக்கத்தைத் தான் அளித்தன, வள்ளுவர் நகர்-அதன் ஒளி வழிந்து கொண்டிருந்த எழிற் தோற்றம்! எழுச்சியூட்டிய நிகழ்ச்சிகள்! புதிய திருப்பங்களைத் தந்த முடிவுகள்! பெற்ற சிறப்பான அனுபவங்கள் எல்லாமாகச் சேர்ந்து!

சோதனை இயந்திரக் கருவிச் சாதனங்கள்

சென்னை, மே 21—

விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலைகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புதிய சோதனைகளுக்கு, சோதனை இயந்திரக் கருவிச் சாதனங்கள் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு அவற்றை இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதற்காக அண்மையில் அயல் நாட்டு உதவியுடன் ஒரு பெரிய நிறுவனம் ஏற்படுத்தப்படும் அதற்குரிய பயிற்சியும் இந்தியாவிலேயே அளிக்கப்படும்.

'என். ஜி. ஓ. கோரிக்கை கவனிக்கப்படுமாம்'

'சென்னையில் நடைபெற்ற என். ஜி. ஓ. மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் அரசாங்கத்திற்குக் கிடைத்தவுடன் அவைகளைச் சென்னை அரசாங்கம் பரிசிலனை செய்யும்' என்று முதலமைச்சர் காமராசர் பத்திரிகை நிருபர்களிடம் தெரித்தார்.

அனுமதிக்கமாட்டார்?

புதுடில்லி, மே 22—

கேட்கப்படும் ஒரு கேள்வி நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பாதகமானதாக இருக்குமென்று தோன்றினல், அக்கேள்வியை அனுமதிக்கப் போவதில்லையென்று, மக்கள் சபையில், உறுப்பினர் ஒருவரின் உப-கேள்வியை நிராகரிக்கையில், சபைத் தலைவர் அனந்தசயனம் அறிவித்துள்ளார்.

'தமிழரசுக் கழகத்திற்கு அவசியமில்லையாம்'

'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்று திருத்த வேண்டுமாம்!

வினோபா பாவே — சிவஞானம் உரையாடல்

ஸ்ரீபெரும்புதூர், மே 22—

இன்று பிற்பகல் ஸ்ரீபெரும்புதூரில் ஆச்சாரியா வினோபா பாவே அவர்களை, அவர் தங்கியிருக்கும் இடத்தில் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்கள் சந்தித்துச் சுமார் அரைமணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தாராம்.

அப்போது, ம. பொ. சி. அவர்கள், தமிழரசுக் கழகம் அரசியல் கட்சியன்று என்றும், தமிழ்மொழி, தமிழர் கலாச்சாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடும் ஒரு கலாச்சார வளர்ச்சிக் கழகம் என்றும் குறிப்பிட்டாராம்.

உடனே, வினோபா பாவே, "தமிழரசுக் கழகம் தொடர்ந்து இருக்க வேண்டிய தேவை உள்ளதா?" என்றும், 'அதுவும், மாநிலங்களை மொழி வழியில் திருத்தி அமை[illegible]க்கப்படும் இச்சமயத்தில் அக்[illegible] இருக்க வேண்டியது தே[illegible] என்றும் கேட்டாராம்.

உடனே ம. பொ. சி. [illegible] சென்னை மாநில அ[illegible] மத்திய அரசாங்கமு[illegible] கலாச்சாரத்தை வளர்[illegible] கரை காட்டுவதாகத் [illegible] என்றுகூறி, உதாரண[illegible] தலைகளில் பிற கவிஞர்[illegible] வங்கள் தீட்டப்பட்டிரு[illegible] தமிழ்ப் பெரும் புலவர் [illegible] வரின் உருவம் தீட்டப்ப[illegible] யும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உடனே ஆச்சாரியா வினோபா பாவே, 'அப்படியானல் தமிழரசுக் கழகம் என்ற பெயரை மாற்றி தமிழ் வளர்ச்சிக் கழகம் என்று அழைக்கலாமே?' என்று குறிப்பிட்டாராம்.

கம்பனுடைய காவியத்தையோ அல்லது வள்ளுவரின் திருக்குறளையோ பிரசுரிப்பதால் மட்டும் தமிழ் மொழி வளர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கக் கூடாதென்றும், தமிழ் மொழி மீதும், தமிழ்க் கலாச்சாரத்தின் மீதும் உண்மையான பற்றுதல் மக்களுக்கு ஏற்படும்படி செய்ய வேண்டுமென்றும், எனவே, தமிழரசுக் கழகம் தொடர்ந்து பணிபுரிய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றும் ம. பொ. சி. அவர்கள் பதில் கூறினராம்.

பிறகு தமிழரசுக் கழகத்தின் வருங்கால திட்டத்தைப் பற்றி ஆச்சாரியா கேட்டபோது, மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் அதிகப்படியான அதிகாரங்கள் அளிக்கும்படி செய்வதற்குக் கழகம் பாடுபடுமென்றும், அதனல் வடக்கிற்கும்—தெற்கிற்கும் நல்லுறவு ஏற்பட வழி பிறக்குமென்றும் ம பொ. சி. அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிறன்று ஆச்சாரியா வினோபா பாவே பத்திரிகை நிருபர் கூட்டத்தில், தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் ஆரம்பப்பள்ளி இறுதி வகுப்பு வரையில் படித்த பிறகு மலையாள மொழியைக் கற்கும்படி செய்யவேண்டுமென்றும், அதே போல் கேரள நாட்டிலுள்ள மலையாளச் சிறுவர்களும் தமிழ் மொழியைக் கற்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் குறிப்பிட்டதைத் தாம் வரவேற்பதாகவும், ஆனல் நடைமுறைக்கு அந்த யோசனை ஒத்து வராது என்பதாகவும், தென் திருவிதாங்கூரில் உள்ள தமிழர்கள் தமிழ் கற்கும் முறையிலேயே பல தொல்லைகள் ஏற்பட்டிருப்பதே அதற்குச் சான்று என்றும் திரு சிவஞானம் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

ஆச்சாரியா வினோபா பாவே, திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் ஆகியவற்றின் தலைவர்களைச் சந்திப்பார் என்றும், பூதான இயக்கத்திற்கு இரண்டு கழகங்களின் ஆதரவையும் பெற முடியும் என்ற நம்புவதாகக் குறிப்பிட்டார் என்றும் தெரிய வருகிறது.

இரண்டு கழகங்களும் பூதான இயக்கத்தில் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன என்பதற்குரிய அறிகுறிகள் தென்படுவதாக அவர் திரு. ம. பொ. சிவஞானத்திடம் குறிப்பிட்டதாகவும் தெரிகிறது.

பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி என்ன?

குடிசைத் தொழில்கள் செல்வப் பெருக்கிற்கு உதவுமா?

டால்மியாபுரம் பெயர் மாற்றக் கோரிக்கை வடநாட்டு ஆதிக்க எதிர்ப்பின் அறிகுறியே!

தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டில் பொதுச்செயலாளர் தெளிவுரை

...காதிபத்தியத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து நாம் ஏன் ...ருகிறோம் ?

...ரம்' என்ற பெயரை ஏன் 'கல்லக்குடி' என்ற அதன் ...பயருக்கு மாற்றவேண்டுமென்று விரும்புகிறோம் ?

...ரின் கல்வித் திட்டத்தை ஏன் எதிர்த்தோம்?

...ய ஏன் ஆதரிக்கிறோம் ?

...சியை, பாருளாதார முன்னேற்றத்திற்கு ஆச்சாரியாரும், இதர ...தில்லை ளர வேண்டுமென்று விரும்புகிற குடிசைத் தொழில்கள் மிகப் ... கூடியனவா ?

...ன போன்ற கேள்விகளுக்கு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டில் தலைமையுரையாற்றுகையில் பதில் தந்திருக்கிறார்.

அவரது தலைமையுரையின் முதல்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; மற்றொரு பகுதி, இன்று வெளிவருகிறது; தொடர்ந்தும் வெளிவரும்.

"தென்னாட்டு மக்கள், மொழி வழி பிரிந்து, இன வழி ஒன்றுபட்டு, ஒரு திராவிட சமதர்ம ஜனநாயகக் குடியரசுக் கூட்டாட்சி அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற நமது இலட்சியம் கைகூடாதவகையில் அமையும் மத்திய அரசாங்க—டெல்லி ஏகாதிபத்திய சக்திகளுக்கு, நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் போராடுகிறோம்; கண்டனம் தெரிவிக்கிறோம்; நாம் நடத்துகிற போராட்டங்கள், கிளர்ச்சிகள் எல்லாம் நம்முடைய இலட்சியத்தை நோக்கி நம்மை இழுத்துச் செல்வனவாக உள்ளவையாகும்.

"'டால்மியாபுரம்' என்ற பெயரை 'கல்லக்குடி' என்று மாற்ற வேண்டும் என்று நாம் போராட்டம் நடத்தினோம்.

"சிலர், இராமேசுவரம் என்ற பெயர், லால்குடி, ஸ்ரீரங்கம் என்ற பெயர்கள் எல்லாம்கூட வடமொழியிலிருப்பவைதானே? அவற்றை மாற்ற வேண்டும் என்று நீங்கள் ஏன் கோரவில்லை?—என்று கேட்கிறார்கள்.

"டால்மியாபுரம் என்ற பெயரை நாம் மாற்ற வேண்டுமென்றதற்குக் காரணம் என்ன?

"டால்மியா என்ற வடநாட்டு முதலாளி தென்னாட்டிற்கு வந்து, கொள்ளையடிக்கிறார்—சுரண்டுகிறார்—இந்திய சர்க்காரின் தயவில் ஆதிக்கம் புரிகிறார் என்பதில் நமக்குள்ள எதிர்ப்பைக் காட்டுவதற்காகத்தான், அவர் பெயரில் உள்ள ஊர்ப்பெயரை மாற்ற வேண்டும் என்று நாம் கோருகிறோம். நமது இலட்சியத்தை எடுத்துக்காட்டாக வைப்பதற்குத்தான், இந்த பெயர் மாற்றப் போராட்டம்!

"வடநாட்டின் மொழி, வாணிப, பொருளாதார, அரசியல் ஏகாதிபத்தியத்தை நாம் எதிர்க்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதாக இல்லையா, 'டால்மியாபுரத்தை கல்லக்குடியாக மாற்று' என்பது?

"நாட்டில் எத்தனையோ சட்டங்கள் இருந்தன—வெள்ளைக்காரர்கள் இயற்றியவை; ஆனால், அவை எல்லாவற்றையும், மீறி, உடைத்துக் காட்ட முற்படவில்லையே, காந்தியார்? உப்பு காய்ச்சுவதற்காக இருந்த சட்டத்தை மட்டுமதானே உடைத்துக் காட்ட முற்பட்டார், அவர்?

"அதுபோலத்தான், நமது டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டமும்!

"அந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டீர்களா என்றால், 'வெற்றி பெறுவோம்—இன்றில்லாவிட்டால் நாளை; நாளை இல்லாவிட்டால் மறுதினம் நிச்சயம் வெற்றி பெறுவோம்—என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

"உலகில் அரசியல் கட்சிகள் ஆரம்பித்த போராட்டங்கள் எல்லாம், ஆரம்பித்த 10 நாட்களில் வெற்றி பெற்றுவிடும் என்று பொருள்? அப்படி எல்லாப் போராட்டங்களும் உடனடியாக வெற்றிபெறும் என்று கூறிவிட முடியுமா?

"செங்கோட்டையில் மூவர்ணக் கொடியைப் பறக்கவிடுவோம்—என்று, காந்தியார் கூறினார்; எத்தனை நாளைக்குப் பிறகு அது சாத்தியமாயிற்று?

"கார்ல் மார்க்ஸ் கண்ட கனவு எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு பலிதமாயிற்று? லெனின் மேற்கொண்ட முயற்சிகள் எத்தனை ஆண்டுகள் கழித்து வெற்றியளித்தன? அதுபோலத்தான், நாம் 'டால்மியாபுரம்' பெயரை, இன்றில்லாவிடின் நாளை மாற்றியே தீருவோம்; அதற்கான முயற்சிகளை நாம் தொடர்ந்து மேற்கொள்ளவிருக்கிறோம்.

"டால்மியாபுரம் என்ற வடநாட்டு ஆதிக்கச் சின்னத்தை அகற்ற வேண்டும் என்ற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டினோம். அந்த உணர்ச்சி இன்னும் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து மேலும் அந்த உணர்ச்சி பெருக, கொழுந்துவிட்டெரிவதற்கான முயற்சிகளைச் செய்வோம்.

"ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்தோம்; போராட்டம் நடத்தினோம்; தடியடிபட்டோம்; கண்ணீர்ப் புகைக் குண்டுகளுக்கு இரையானோம்; சிறைச்சாலையில் அவதிப்பட்டோம்; அதேபோது, போராட்டத்தில் வெற்றியும் பெற்றோம். ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்ட வெற்றி மட்டுமின்றி, ஆச்சாரியாரையே பதவியிலிருந்து துரத்தியடித்த அளவுக்கு நமக்கு வெற்றி கிட்டியது.

"மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களுக்கும், தொல்லைகள் பல அனுபவித்த வீரர்களுக்கும், நாம் இந்த நேரத்தில் நமது வீரவணக்கத்தைச் செலுத்துகிறோம்.

"நாம் நடத்திய அந்த மும்முனைப் போராட்டம், எதிர்காலத்தில் நல்ல நம்பிக்கையை நமக்குத் தரவல்லதாகும். நமது சாதனைகளுக்கு, ஆற்றலுக்கு, வீரத்திற்கு அந்தப் போராட்டம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

"நமக்குள்ள வசதிக் குறைவுகளுக்கிடையே நாம் சாதித்துள்ள சாதனைகள் மிகப் பெரியவையாகும்; இது நமக்குப் பெருமையும், பூரிப்பும் தருவனவாகும்.

"கைத்தறியாளர்கள் வாழ்விழந்து தவித்த நேரத்தில் நாம் அவர்களுக்கு உதவினோம்; அண்ணா உட்பட கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும், தோளில் கைத்தறி ஆடைகளைச் சுமந்து வீதி வீதியாகச் சென்று விற்றுக் கொடுத்தோம். கைத்தறியை நாம் ஆதரித்தது கொள்கை காரணமாக அல்ல; நிலைமை காரணமாகத்தான்!

"கைத்தறியை ஆதரித்தது, இயந்திர வெறுப்பினால் அல்ல; மாறாக, நாம் இயந்திர வளர்ச்சியை ஆதரிப்பவர்கள்.

"மனிதர்களின் உழைப்பைக் குறைத்து, வசதிகளைப் பெருக்குகிறது, இயந்திரம். மனிதனுக்குத் தேவையான பொருள்கள் அத்தனையையும் இயந்திரத்தால் உற்பத்தியாக்க முடியும் என்று விஞ்ஞானம் கண்டறிந்திருக்கிறது; அந்த விஞ்ஞான வளர்ச்சியில் நாம் அக்கரை கொண்டவர்கள்.

"கைத்தறியை நம்பி 30 இலட்சியம் மக்கள் வாழ்கிறார்கள், இப்போது! இவர்கள் வேறெந்தத் தொழிலையும் செய்ய இயலாத நிலையிலிருப்பவர்கள். வேறெந்தத் தொழிலையும் இனிமேல் கற்றுக் கொண்டு, அந்தத் தொழிலைச் செய்து பிழைக்கமுடியாது என்ற நிலை இருப்பதால், அவர்கள் நம்பியுள்ள கைத்தறியை நாம் தற்காலிகமாக ஆதரிக்கிறோம்.

"கைத்தறி நெசவாளர்கள், ஏற்கனவே நூல் நூற்பதைவிட்டு விட்டார்கள்; இப்போது தங்கள் நெசவுக்குத் தேவையான நூலினை ஆலைகளிடமிருந்துதான் பெற்றுக் கொள்கின்றனர். இப்போதுள்ள தலைமுறை நெசவாளர்கள், இந்தக் கைத்தறியை விட்டு வேறு தொழிலில் ஈடுபட முடியாது. என்றாலும், அடுத்தடுத்துவரும் தலைமுறையினர் படிப்படியாக இந்தக் கைத்தறியை விட்டு, வேறு பல தொழில்களில் ஈடுபடவேண்டிய அவசியம் இருக்கத்தான் செய்கிறது.

"உலகத்தில் இயந்திர வளர்ச்சி வேகமாகிக் கொண்டுவரும் இந்தக் காலத்தில் கைத்தறியும் நீண்ட நெடுங்காலத்திற்கு நிலைபெற்றிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

"மனிதரின் உழைப்பைக் குறைத்து ஓய்வு நேரத்தை அதிகரிக்கச் செய்வதில்தான், மனித வாழ்வின் முன்னேற்றம் இருக்கிறது. இந்த முன்னேற்றத்திற்கு இயந்திரம்தான் உதவ முடியுமே தவிர—உதவி வருகிறதே தவிர, குடிசைத் தொழில்கள் அல்ல!

"உலகம் இயந்திர வளர்ச்சியை நோக்கி வேகமாக ஓடிக்கொண்டிருக்கும்போது — புதிய புதிய பொறிகளை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும்போது, ஆச்சாரியார், குடிசைத் தொழில்களை வளர்ப்பதற்காக என்று கூறி, 'மாணவர்களும் இந்தத் தொழில்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்' என்ற திட்டம் ஒன்றை கொண்டுவந்தார்.

"விஞ்ஞான ரீதியில் பொருள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற கொள்கையுடையவர்கள் நாம்; எனவேதான், நாம் ஆச்சாரியாரின் திட்டத்தை எதிர்த்தோம். சிலர் நினைப்பதைப்போல, 'ஆச்சாரியார் பார்ப்பனர்; அதனால்தான் அவரை எதிர்த்தோம்' என்பது தவறு! அதே ஆச்சாரியார், தஞ்சை பண்ணையாள் சட்டம் கொண்டுவந்தார்; அதற்காக அவரைப் பாராட்டி, நாம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். கைத்தறிகளுக்குப் பிரத்தியேகமாக சில ரகத் துணி நெய்வதை ஒதுக்க வேண்டுமென்று அவர் தீர்மானம் கொண்டுவந்தபோதும் அவரை நாம் பாராட்டியிருக்கிறோம்; ஆனால் குலதர்மக் கல்வித் திட்டத்தை அவர் புகுத்தி சிறு பிள்ளைகளின் கல்விக் கண்ணைக் குருடாக்க முற்பட்டபோது, அவரை எதிர்த்தோம்.

"ஆச்சாரியார் அந்தத் திட்டத்தைப் புகுத்திய நேரத்தில், 80 இலட்சம் பேர் இம்மாநிலத்தில் மாணவப் பருவத்தினராயிருந்தனர்; அவர்களில் 40 இலட்சம் பேர் மட்டுமே பள்ளி சென்று வந்தனர்; இந்த 40 இலட்சம் பேரில் 1 முதல் 5 வகுப்புக்குள் படிப்பை நிறுத்திவிட்டவர்கள் 35 இலட்சம் பேர்; 5 இலட்சம் பேர் மட்டுமே 6-வது வகுப்புக்கு மேல் படிக்கச் சென்றனர். இந்த 5 இலட்சம் போக 75 இலட்சம் பேரும் ஆச்சாரியார் கல்வித் திட்டத்தில் கூறப்படுகிற பாய் முடைதல், கூடை முடைதல், பானை வனைதல், கோரைப் பாய்—ஓலைப்பாய் பின்னுதல், செங்கல் அறுத்தல் என்பன போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆச்சாரியாரோ, ஆறுவது வகுப்புப் படிக்கும் 5 இலட்சம் பேரும் இந்த குடிசைத் தொழில்களில் ஈடுபட வேண்டுமென்றார். இது நாட்டுக்கு உகந்ததாக இருக்க முடியுமா? நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிவதாகுமா?

"ஆச்சாரியாரும, அவரைப் போன்று குடிசைத் தொழில்களை ஆதரிப்பவர்களும் உபயோகிக்கும் கைக்கெடிகாரம், மூக்குக் கண்ணாடி முதல், நாட்டிற்குத் தேவையான பெரும் இயந்திரங்கள் வரை வெளிநாடுகளிலிருந்து இங்கு இறக்குமதியாகிக் கொண்டேயிருக்கும்; அந்த இறக்குமதிக்காக இந்த நாட்டுச்செல்வம் வெளிநாடுகளுக்குப் பறிபோய்க்கொண்டேயிருக்கும்; ஆனால், இங்கு வெறும் குடிசைத் தொழில்கள் வளர்ந்துகொண்டேயிருக்கும் என்றால், இந்த நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வழி ஏது?

"இந்த நாட்டுக் குடிசைத் தொழில்களுக்கு உள்நாட்டிலேயே போதுமான 'மார்க்கெட்' இல்லை என்ற நிலை இருக்கும்போது, வெளிநாடுகளில் எங்கு 'மார்க்கெட்' கிடைக்கும்? எனவேதான், நாம், விஞ்ஞான ரீதியில் பொருள் உற்பத்தி வேண்டும் என்கிறோம்.

"குடிசைத் தொழில் வளர்ச்சியினால், நாடு முன்னணியில் செல்லுமே தவிர முன்னேற வழியே கிடையாது.

"ஆக, கொள்கை ரீதியில் நாம் கைத்தறியை ஆதரிக்கவில்லை; நிலைமைக்காகத்தான்— இந்தத் தலைமுறை நெசவாளர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் ஆதரித்தோம் என்பதும் தெளிவு.

அறிவு தேடிய அன்புருவினன்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

இராம நாமத்தை அனவரதமும் அவர் உச்சரித்தார்; கிருஷ்ணனைப் புகழ்ந்தார்; அவன் தந்ததாகக் கூறப்படும் கீதையை மனனம் செய்தார். இதன் உள்ளடக்கம் ஆராய்ந்து அறியத்தக்கது.

ஆரிய அனுசாரத்திற்கு அடிமைப்பட்டுக் கிடப்போர், சனாதன தர்மத்தைத் தாங்கித் திரிவோர், கோலை நூலை அற நூலெனச் சாதித்து வருவோர், புத்தர் பேரறிவு பெற்ற 2500-ம் ஆண்டைக் கொண்டாட முனைந்துள்ளனர்.

இந்தியத் துணைக் கண்டம் முழுதும், இவ்விழா கொண்டாட இலட்சம இலட்சமாக செலவிட, இந்தியப் பேரரசு முன்வந்து இருக்கிறது.

புத்தரின் உயர்நெறியை நாட்டைவிட்டுவிரட்டுவதில் இந்தியத் துணைக் கண்டம பெயர் பெற்றிருப்பது போலவே, புத்தரின் நினைவாக விழா கொண்டாடுவதிலும் இக்கண்டம் பெயர் பெறும் என்பதில் வியப்பொன்றுமில்லை.

பணப் பகட்டையும், அதிகார அந்தஸ்தையும் கூட்டிக் காட்டும் விழா, பெயர் பெறாமல் இருக்கமுடியுமா?

2500 ஆண்டுகட்டு முன்னர், ஆரிய சமூகக் கேடுகளைக் களையவும், புராணப் பொய்க்கதைகளை ஒழித்து புத்தறிவு ஊட்டவும் புத்தர் மேற்கொண்ட சமுதாயப் புரட்சியை மீண்டும் மேற்கொண்டு பணியாற்றி வருபவர் நம்மவரேயாவர். புத்தர் நெறியைப் பரப்பும் பெரும் பொறுப்புக்கு நம்மை நாமே ஆளாக்கிக் கொண்டிருக்கும் நாம், புத்தர் நெறிபற்றி, அதற்கெனக் கொண்டாடப்பெறும் விழாவிலாவது நினைக்கப்படுகிறதே, பேசப்படுகிறதே என்பதை எண்ணி எப்படி மகிழாமல் இருக்க முடியும்?

வாழ்க புத்தர் திருநாமம்!

வளர்ந்தோங்கி வளம்பெறுக புத்தர் நெறி!

சூழ்நிலைஏற்பட்டுவிடாதாம்

'கம்யூனிஸ்டு சீனாவுக்கு எகிப்து ஒப்புதல் தந்துள்ளதால், ஐ நா.வில் சீனாவைச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுவிடாது' என்று, அமெரிக்க அரசாங்க அமைச்சர் டல்லஸ் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ